# அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

# புனரமைப்பு திட்டம்

# REPORT 01

17 August 2020



# அறிக்கை – 01

E-mail: ariyalaisriparwathy@gmail.com

J/Ariyalai Sriparwathy Vidyalayam Development Society - International

# அறிக்கை - 01

## தலைவர் கருத்து:

2020 ஓகஸ்ட் 9 ஆம் திகதி லண்டன் நேரம் பி.ப. 3.00 மணிக்கு எமது முதல் கூட்டம் Zoom செயலி ஊடாக கூடப்பட்டது. இதில் 50 இக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் 6 நாடுகளிலிருந்து கலந்து கொண்டார்கள். இக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஸ்ரீ பார்வதியின் தலைமையாசிரியர் திருக.ரவிச்சந்திரன் கலந்து கொண்டார்.

என்னைத் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்ததற்கு முதல்கண் எனது நன்றிகள். என்னுடன் கூட திரு ஜெ. தர்மேந்திரா செயலாளராகவும், திரு கு. தவேந்திரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

நாங்கள் தற்போது நிறுவனத்தின் யாப்பை எழுதிக்கொண்டிருக்கும் அதே வேளையில் சபையின் கட்டமைப்பையும் வகுத்துக்கொண்டு இருக்கிறோம். இவை விரைவில் அங்கதவர்கள் முன் வைக்கப்பட்டு இணையதளத்தில் விவாதித்து ஆராயப்படும். இதன் பின் திருதியமைக்கப்பட்ட யாப்பு 23 ஆம் திகதி கூட்டத்தில் அங்கஃத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

உங்கள் விருப்பத்துக்கிணங்க திங்கட்கிழமை 17/08/20 இல் இருந்து காலையில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்கிவருகின்றோம். இது தலைமை ஆசிரியரின் சம்மதத்தோடு இடம்பெறுகிறது.

அடுத்த சனிக்கிழமையில் இருந்து நாங்கள் மேலதிகவகுப்புகளை ஆரம்பிக்க இருக்கின்றோம்.

எங்கள் திட்டங்களை ஆதரித்து உதவுவதற்காக கல்வித்திணைக்களம் பாடசாலைக்கு ஒரு தகவல், தொடர்பு, தொழில்நுட்ப ஆசிரியரை ( Information and Communication Technology -ICT ) போன வாரத்திலிருந்து நியமனம் செய்துள்ளது.

# செயலாளர் கருத்து:

*என்னை ஏகமனதாக தெரிவு செய்ததுக்கு முதல்கண் என் நன்றிகள்.*

*கூட்டத்தின் அறிக்கயை உங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறேன்.*

அடுத்த Zoom கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல்

திகதி: ஆகஸ்ட் 23 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| நேரம்: | லண்டன் நேரம் | பி.ப. | 2.00 - 3.30 |
| | ஐரோப்பா, நோர்வே நேரம் | பி.ப. | 3.00 - 4.30 |
| | நியூயோர்க், கனடா நேரம் | மு.ப. | 9.00 – 10.30 |
| | கன்பரா நேரம் | இரவு | 11.00 – 12.30 |
| | கொழும்பு நேரம் | மாலை | 6.30 – 8.00 |

Zoom link:

https://us02web.zoom.us/j/89806539637

கூட்டம் ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களிற்கு முன்பிலிருந்து இணைந்து கொள்ளலாம்.

1. கடந்த கூட்டஅறிக்கையை முன்வைத்தல்
2. இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளை தெரிவித்தல்
3. துணைத் தலைவர் தேர்தல்
4. முன்மொழியப்படும் சபைக் கட்டமைப்பை விளக்குதல்
5. யாப்பில் ( சட்டதிட்டம் ) திருத்தங்கள்
6. உறுப்பினர் கட்டணத்தை தீர்மானித்தல்
7. வேறு விடயங்கள்

துணைத் தலைவர் தேர்தல்

நியமிக்கப்டுபவர் பெயர், கைத்தொலைபேசி இலக்கம் மற்றும் முன்மொழிபவர், வழிமொழிபவர் பெயர்களுடன் ariyalaisriparvathi@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு வெள்ளிக்கிழமை 21.08.2020 லண்டன் நேரம் இரவு 12 மணிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

# *பொருளாளர் கருத்து:*

*என்னை ஏகமனதாக தெரிவு செய்ததற்கு முதல்கண் என் நன்றிகள்.*

*ஏற்கனவே திரு ஸ்ரீதேவா அவர்களினால் எடுக்கப்பட்ட முயற்சியின்படி பாடசாலையினை கீழ் குறிப்பட்ட வகையில் புனரமைப்புச் செய்து புதுப்பிப்பதற்கு இப்போது சரியான செலவுத்திட்ட மதிப்பீட்டறிக்கை எடுக்க முயற்சி செய்துகொண்டு இருக்கிறோம்.*

*<u>திட்ட விபரங்கள்</u>*

A. ***<u>முதல் மூன்று வகுப்பறைகளின் திருத்த வேலைகள்</u>***

***இது ஏற்கனவே அறிவிக்கப்பட்டது***

1. *வகுப்பறைகளின் உயரம் காணாத படியால் கோப்பிசம் முற்றிலும் அகற்றப்பட்டு அரைச்சுவர் உள்ள பக்கங்கள் மூடி கட்டுதல்.*
2. *அனைத்து சுவர்களும் சரியான உயரத்திற்கு உயர்த்தி கட்டுதல்.*
3. *கோப்பிச மரங்கள் சரிபார்த்து சொலிக்கனம் பூசி திரும்ப கட்டுதல் .*
4. *உக்கின கோப்பிச பலகைகளை மாற்றல்.*
5. *ஓடுகள் கழுவி சரிபார்த்து திரும்பப் போடுதல்,*
6. *தேவையெனில் புதிய ஓடுகள் மாற்றுதல்*
7. *தற்போதைய நிலங்கள் உடைக்கப்பட்டு புதிய நிலம் போடுதல்*
8. *மாபிள் பதித்தல்*
9. *எல்லா சுவர்களுக்கும் PASTE வைத்து வர்ணம் பூசுதல்*
10. *Ceiling tile (Sheet) அடித்தல்.*
11. *புதிய LIGHT போடுதல்*
12. *புதிய தரமான தளபாடங்கள் போடுதல்*
13. *ஒரு அறைக்கு SMART BOARD போடுதல்*
14. *மற்ற அறைகளுக்கு PROJETOR, PROJECTOR SCREEN,WHITE BOARD போடுதல்.*
15. *FAN போடுதல்*

B. ***மேல் குறிப்பிட்ட வகுப்பறைகளுடன் சேர்ந்து இருக்கும் ஏனைய அறைகள்***

1. *ஏனைய மூன்று அறைகள் மேல் குறிப்பிட்டவாறு கோப்பிசம் சரிபார்த்து ஓடுகள் சரிபார்த்து சுவர்கள் கட்டி இவைகள் சங்கீத, நடன , சித்திர பாடங்களுக்கு ஏற்றவாறு கட்டுதல்*
2. *இவற்றிக்கான தளபாடங்கள் போடுதல்*

## C. **ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டவை**

*தரம் 6-11 வகுப்பு மாணவர்களுக்கு மூன்றாம் தவணை பரீட்சைக்கான வினாத்தாள்கள் - ரூ.20000*

1. *ஆசிரியர் ஒய்வறை திருத்துதல்*
2. *சித்திர அறை, நடன அறை, சங்கீத அறை, சமயபாட அறை, விளையாட்டு அறை அமைத்து, உபகரணங்களும் வழங்குதல்*
3. *தரம் 6 மற்றும் தரம் 7 க்கான வகுப்பு அறை அமைத்தல்*
4. *அலுமாரி - 6*
5. *கிழக்கு அரியாலை பிள்ளைகளை அழைத்து வர பேருந்து ஒழுங்கு செய்தல்*
6. *சனிக்கிழமை வகுப்புகள்*

### ***சித்திர அறைக்கு தேவையான பொருட்கள்***

1. *அலுமாரி(கபேட்)*
2. *A4 sheet*
3. *A3 sheet*
4. *கலர் சோக்*
5. *கத்தரிக்கோல்*
6. *ஸ்டேப்ளர்( Stapler)*
7. *Brush*
8. *Sketch paper*
9. *Water கலர்*
10. *பென்சில்*
11. *White Board*
12. *மாக்கர்*

### ***சங்கீத அறை க்கு தேவையான பொருட்கள்***

1. ***அலுமாரி***
2. ***வயலின்***
3. ***வீணை***
4. ***மிருதங்கம்***
5. ***தபேலா***
6. ***பியானோ***
7. ***தம்புரா***
8. ***எலக்ரிக் தம்புரா***
9. ***Laptop, CDகள்***

### ***நடன அறைக்கு தேவையான பொருட்கள்***

1. *அலுமாரி*
2. ***Laptop, CDகள்***

*D.* ***மதில்***

1. *ஏற்கனவே இருக்கும் 1000 அடி மதிலை பாதுகாப்பு நிமித்தம் உயர்த்தி, நவீனமுறையில் கட்டுதல்.*

2. *அதற்கு வர்ணம் பூசுதல்*

*E.* ***மலசலகூடம்***

1. *புதிய மலசலகூடம் கட்டுதல்*
2. *அதற்கான தளபாடங்ககள் போடுதல்*

*F.* ***சைக்கிள் நிறுத்தும் இடம் திருத்துதல்***

*G.* ***அதிபரின் அறைக்குப் பக்கத்தில் இருக்கும் e-learning அறையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை சுகவீனமுற்ற மாணவர்களுக்கென ஒதுக்குதல்.***

*H.* ***பாடசாலை அலுவலகம் நவீனமயப்படுத்தப்படுத்தல்***

*I.* ***<u>நீங்கள் கேட்டுக்கொண்டது</u>***

1. *பிள்ளைகளுக்கு காலை, மதிய உணவு வழங்குதல்*
2. *சுத்திகரித்த தண்ணீர் வழங்குதல்*
3. *சாப்பத்து வழங்குதல்*
4. *பாடசலை உபகரணம் வழங்குதல்*
5. *விளையாட்டு மைதானத்தை திருத்துதல்*
6. *ஸ்ரீ பார்வதியில் படிக்கும் பிள்ளைகளின் தாய்மாருக்கு உதவி செய்தல் (சமுத்தியில் உதவி பெறுபவருக்கு)*